# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2303/05 - 2022 ඔක්තෝබර් මස 25 වැනි අඟහරුවාදා - 2022.10.25

*2303/05 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

66 ஆம் பிரிவின் (2) மற்றும் (3) ஆம் உப பிரிவுகளின் கீழான அறிவித்தல்

ஆளொருவரினால் மேற்கொள்ளப்பட்ட கடன் கோரிக்கைக்கான குறிப்பிடப்பட்ட இந்த ஏற்பாடானது இத்தால் அட்டவணை 1 இன் வங்கி வியாபாரத்திலிருந்தான ஈட்டங்கள் மற்றும் இலாபங்களை கணிப்பதில் கழிக்கப்பட வேண்டிய அளவினையும் மற்றும் இத்தால் அட்டவணை 2 இல் அத்தகைய ஆளினால் பராமரிக்கப்பட வேண்டிய அந்த ஏற்பாட்டின் பதிவுகளின் வடிவமைப்பினையும், 2021 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 66 ஆம் பிரிவின் (2) மற்றும் (3) ஆம் உப பிரிவுகளின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் டொன் ரஞ்சித் சிசிரகுமார ஹப்புஆரச்சி ஆகிய நான், இவ் அறிவித்தல் மூலம், குறிப்பீடு செய்கிறேன்.

இக்குறிப்பீடுகள் 2022, ஏப்பிறல் 1 ஆம் திகதி முதல் செயல்வலுப் பெறும் என்பதுடன் 2018, ஏப்பிறல் 1 ஆந் திகதிய 2064/57 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் அதே திகதியில் செயற்படும் வகையில் இரத்துச் செய்யப்படுகின்றது.

**டொன் ரஞ்சித் சிசிரகுமார ஹப்புஆரச்சி**,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

கொழும்பு,
2022, ஒற்றோபர் 21.


1A - G 37858 — 08 (2022/10)



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை 1

1. கடன் வசதிகளுக்கான குறிப்பிடப்பட்ட ஏற்பாடு கீழ்வருவன தொடர்பில் கழிக்கப்படமுடியாது.

(அ) நகை ஈடுவைத்தல் வியாபார நடவடிக்கையை முன் எடுக்கும் நகை ஈடுவைப்பவரின் கடன் கோரிக்கையொன்று,

(ஆ) இணைந்த அல்லது இணைக்கப்பட்ட ஆளொருவருக்கு வழங்கப்பட்ட கடன் கோரிக்கை,

(இ) இலங்கைக்கு வெளியே ஆளொருவருக்கு வழங்கப்பட்ட கடன் கோரிக்கை

(ஈ) ஏற்புடைய நிதி நிறுவனத்தின் ஊழியர் ஒருவருக்கு வழங்கப்பட்ட கடன் கோரிக்கை

(உ) நிதி நிறுவனம் கடன்பெறுநர் ஒருவருக்கு பல தடவைகள் கடன் வசதிகளை வழங்கியுள்ளதுடன், அவர் குறிப்பிட்ட ஏற்பாட்டு திகதிக்கு முன்னர் தொண்ணூறு நாட்களினுள் இந்த கடன் வசதி எவை தொடர்பிலும் ஏதேனும் கொடுப்பனவினை மேற்கொண்டிருப்பின் அத்தகைய கடன்பெறுநரின் கடன் கோரிக்கை.

2. இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLFRS 9) பிரகாரம் வகுக்கப்பட்ட கட்டம் 1 மற்றும் 2 கடன் வசதிக்கான குறைபாட்டு கட்டணங்களுக்கான குறிப்பிட்ட ஏற்பாடு கழிக்கப்படமுடியாது.

## அட்டவணை 2

நிதி நிறுவனங்கள், கடன் கோரிக்கையின் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பதிவுகளை பராமரிப்பதற்கான வடிவமைப்பு (கட்டம் 1, 2 மற்றும் 3 கடன் வசதி என்பவற்றுக்கு தனித்தனியாக)

| கடன் இலக்கம் | வாடிக்கையாளரின் பெயர் | கடன் வசதியின் வகை | மொத்த கடன் மூலதனம் | மொத்த வட்டி | வரிமதிப்பீட்டாண்டின் ஆரம்பத்தில் கடன் மூலதன மீதி | வரிமதிப்பீட்டாண்டின் ஆரம்பத்தில் வட்டி மீதி | ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு கடன் மூலதன குறைபாட்டு மீதி | ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு வட்டி குறைபாட்டு மீதி | வருடத்திற்கான கடன் மூலதன குறைபாட்டு ஏற்பாடுகள் | வருடத்திற்கான வட்டி குறைபாட்டு ஏற்பாடுகள் | இவ் வருடத்தில் சேகரிக்கப்பட்டவை | வேறு ஏதேனும் சீர்படுத்துகைகள் | வரிமதிப்பீட்டாண்டின் இறுதியில் கடன் மூலதன குறைபாட்டு மீதி | வரிமதிப்பீட்டாண்டின் இறுதியில் வட்டி குறைபாட்டு மீதி | வரிமதிப்பீட்டாண்டின் இறுதியில் கடன் மூலதன மீதி | வரிமதிப்பீட்டாண்டின் இறுதியில் வட்டி மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |

EOG 10 - 0216

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.